1996 பிப்ரவரி 16]

33—

## வல்லம்பட்டியில் தொடக்கப் பள்ளி தொடங்குதல்

*22853—*திரு. ஜெ. பாலகங்காதரன்:* மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிவகாசி தொகுதி, வல்லம்பட்டியில் அரசு சார்பில் தொடக்கப்பள்ளி தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சிவகாசி தொகுதி, வல்லம்பட்டியில் ஏற்கெனவே அரசு சார்பில் தொடக்கப்பள்ளி தொடங்கப்பட்டு இயங்கி வருகிறது.

*திரு. ஜெ. பாலகங்காதரன்:* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகாசி தொகுதி மக்களின் 40 ஆண்டுகால கோரிக்கையை ஏற்று, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் சென்ற வாரம் சாத்தூர் தாலுக்காவை இரண்டாகப் பிரித்து சிவகாசியை தனி தாலுக்காவாக அறிவித்ததற்கு சிவகாசி தொகுதி மக்களின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாகச் செலுத்து கின்றேன். இந்த வினா நான் எழுப்பும்போது அங்கே ஏற்கெனவே நடைபெற்றுக் கொண்டிருந்த ஒரு தனியார் பள்ளி திடீரென்று மூடப்பட்டு விட்டது. அதை நான் உடனடியாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடமும், மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் அவர்களிடமும் மனுவாகக் கொடுத்த உடனேயே இரண்டு நாட்களுக்குள்ளாக விரைந்து செயல்பட்டு அங்கே அரசின் சார்பாக ஒரு பள்ளியை ஏற்படுத்திக் கொடுத்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் தலைவர்:* வினா எண் 34, திரு. செ. து. வரதராஜன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

34—

## தமிழை நர்சரிப் பள்ளிகளில் கட்டாயப் பாடமாக்குதல்

* 37053—*திரு. செ. து. வரதராஜன்:*

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) நர்சரிப் பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்கும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், அது எப்போது முதல் நடைமுறைப்படுத்தப்படும் ?*

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, கல்வி அமைச்சர் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : நர்சரிப் பள்ளிகளில் தமிழ் கட்டாயமாக பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்பதற்கு அரசாணை (நிலை) எண்.484, கல்வி, நாள் 24-4-91-ல் ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது. நர்சரிப் பள்ளிகளில் தமிழ் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்கிற நிபந்தனையின் பேரிலேதான் நர்சரிப் பள்ளிகள் செயல்படுவதற்கான ஒப்புதலும் இப்போது வழங்கப்படுகிறது. அரசின் ஒப்புதல் பெற்று இயங்கும் அனைத்து நர்சரிப் பள்ளிகளிலும் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது.

முற்பகல் 10-55

**திரு. செ. து. வரதராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டின் தங்கத் தலைவி டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 8-வது உலகத் தமிழ் மாநாடு நடத்தி தமிழ் வளர்ச்சிக்காக சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். தமிழ் வளர வேண்டுமாயின் பள்ளிகளிலே தமிழ் பாடத்திற்கு முதல் இடம் தரவேண்டும். ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது என்று சொல்லுவார்கள். ஓரெட்டில் வளராத வளர்ச்சியும் ஈரெட்டில் படிக்காத பிள்ளையும் படிக்க மாட்டார்கள் என்று சொல்லுவார்கள். ஆரம்பப் பள்ளியிலே தமிழ் படிக்காதவர்கள், பட்டப்படிப்பிலே தமிழ் படிப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியவில்லை. நர்சரி பள்ளிகள் முழுவதிலும் ஆங்கிலம், இந்தி தான் குழந்தைகளுக்கு கற்றுத் தருகிறார்கள். நர்சரி பள்ளிகளுக்குச் சென்ற உடனே அம்மா அப்பா என்று அழைத்த குழந்தைகள் மம்மி, டாடி என்று அழைக்க ஆரம்பிக்கிறார்கள். இதனை மாற்றிட அரசு ஆணை பிறப்பித்தாலும் நடைமுறையில் இது போன்று தமிழுக்கு முக்கியத்துவம் தருவதாகத் தெரியவில்லை. அதைக் கவனித்து நர்சரி பள்ளிகளில் முதல் கட்டமாக தமிழ் பாடத்தைக் கற்றுக் கொடுக்க வேண்டும் என்று கட்டாய உத்தரவு போட்டு, அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான ஆணை இடப்பட்டிருக்கிறது. அதைக் கண்காணிக்கும் பணியும் தற்போது தொடரப்பட்டிருக்கிறது.

1996 பிப்ரவரி 16]

திரு. செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகளில் ஒரே மாதிரி வகுப்புக் கட்டணங்கள் வசூலிப்பது கிடையாது. அவரவர்கள் இஷ்டத்திற்கு தகுந்த மாதிரி நர்சரிப் பள்ளிகளில் கட்டணங்களை அதிகமாக வசூலித்துக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டும் அல்லாமல், நர்சரிப் பள்ளிகளிலே சேர்கின்ற மாணவர்களுக்கு நன்கொடை என்று அதிக அளவிலே வசூல் செய்து, ஏழை எளிய மாணவர்கள் படிக்க முடியாமல் தவிக்கின்ற நிலை இருக்கிறது. அதே நேரத்தில் நர்சரிப் பள்ளிகளை ஆரம்பிக்கின்ற இடங்களிலே காற்று வசதியும், சுகாதார வசதியும், விளையாட்டு மைதானமும், தண்ணீர் போன்ற எந்த வசதியும் இல்லாத இடங்களிலே நர்சரிப் பள்ளிகளை ஆரம்பிக்கிறார்கள். இதையெல்லாம் தகுந்த நடவடிக்கை எடுத்து அந்தக் குழந்தைகள் பள்ளிகளிலே ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், ஏழை எளிய பாட்டாளி மக்கள் அந்தப் பள்ளியிலே பயிலுவதற்கு வசதியாக நன்கொடையையும், பள்ளிக் கட்டணத்தையும் ஒருங்கிணைக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நர்சரிப் பள்ளிகளை அவர்களாகவே சில பேர் தொடங்கி விடுகிறார்கள். ஆனால் அரசின் ஒப்புதல் கேட்டு வருகிறபோது நிபந்தனைகளுக்கு உட்பட்டுத்தான், எல்லா வசதிகளும் அங்கே இருந்தால்தான் அதற்கு ஒப்புதல் வழங்கப்படுகிறது. அப்படி ஒப்புதல் வழங்கப்பட்ட பள்ளிகளில் தமிழ் கட்டாயமாக பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று ஏற்கெனவே ஆணை பிறப்பிக்கப்பட்டு அதை நடைமுறைப் படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளையும் அரசு இப்போது ஏற்று செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பள்ளிகளில் கட்டணம் அதிகமாக வசூலிக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதற்கு "கேப்பிடேஷன் பீ அபாலிஷன் ஆக்ட்"-ஐயும் நாம் முன்பே நிறைவேற்றி இருக்கிறோம். நன்கொடை வசூலிக்கக் கூடாது என்று சட்டம் இயற்றி இருக்கிறோம். ஆனால் நன்கொடை வசூலிக்கிறார்கள் என்ற புகார்கள் அரசுக்கு வருவதில்லை. மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் பொதுவாகச் சொல்லுகிறார்களே தவிர, குறிப்பிட்ட வகையில் இந்தப் பள்ளியில் இன்னாரிடம் வசூலிக்கிறார்கள் என்று குறிப்பிட்டு புகார்கள் வரவில்லை. அப்படி வருமேயானால் அதற்கு அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனிவெங்கடப்பன்.

*திரு. கே. முனிவெங்கடப்பன் :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புற்றீசல்களைப் போல பெருகி வரும் இந்த நர்சரிப் பள்ளிகளிலே பயிற்றுவிக்கின்ற ஆசிரியர்கள் போதிய பயிற்சி இல்லாமல் இருக்கிறார்கள். அதனால் அந்தக் குழந்தைகளுக்கு சரியான முறையிலே சொல்லிக் கொடுக்க ஆர்வம் இல்லாமல் இருக்கிறார்கள். ஆகவே அந்தப் பள்ளிகளிலே படிக்கின்ற குழந்தைகளுக்கு நல்ல முறையிலே சொல்லிக் கொடுக்கின்ற வகையிலே அந்த ஆசிரியர்களுக்கென்று குறுகிய கால பயிற்சியை அளிப்பதற்கு சட்டம் இயற்றப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

*மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி :* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மழலையர் பள்ளிகளை ஒழுங்காற்றும் வகையிலேதான் சிட்டிபாபு அவர்கள் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அதனுடைய அறிக்கை பெறப்பட்டு இருக்கிறது. Code of regulations for approved Nursery and Primary Schools என்று அரசு இப்போது முறை வைத்திருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்பதையும் தெரிவித்திருக்கிறோம். ஆசிரியர்களுக்கானகோட் ஆப் கான்டக்ட், உள்பட அனைத்தையும் அரசு நிர்ணயித்திருக்கிறது. அப்படிப்பட்ட ஆசிரியர்கள் ஒப்புதல் பெறப்பட்ட பள்ளிகளிலே பணியாற்ற வேண்டும் என்று அரசு வற்புறுத்தி, அதைச் செயலாக்கி வருகிறது. ஒப்புதல் பெறாத பள்ளிகளில் அப்படி இருந்தால், ஒப்புதல் பெறும்போது அதை நடைமுறைப்படுத்துவதற்கான வாய்ப்பை அரசு உருவாக்கும். அவர்களுக்காக தனியாக பயிற்சி தரும் திட்டம் அரசிடம் இல்லை.

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வினா எண் 35, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

35—

## அந்தியூர் தொகுதியில் கூட்டுக் குடிநீர்த் திட்டம்

*39755—திரு. வே. பெரியசாமி :*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதியில், அந்தியூர் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள அனைத்து கிராமங்களுக்கும் பவானி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர் திட்டத்தின்மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க அரசு ஆவன செய்யுமா ?